079

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

முன்-பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழச்சித்திட்டம்

முதலாம் அரையாண்டு இறுதிப்பரீட்சை - 2006/2007

ESC 1222/ESC 1233 – பிள்ளை உளவியல்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 21.10.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. பிள்ளை விருத்தி பற்றிய கற்றலை இலகு படுத்துவதற்காக விருத்திசார் உளவியலாளர்கள் விருத்தியை பிரதான ஆட்சிப்புலங்களாகப் பிரித்துள்ளனர். இந்த ஒவ்வொரு ஆட்சிபுலத்தைப்பற்றியும் சுருக்கமாக விளக்குக.

(20 புள்ளிகள்)

02 "பிள்ளை வளர்ப்பு பற்றி பெற்றோருக்கு அறிவூட்டுவதும் ஒரு முன்பள்ளி ஆசிரியரின் கடமையாகும்".

பின்வரும் தலைப்புக்கள் பற்றிப் பெற்றோருக்கு அறிவூட்டுவதற்கு பிள்ளை உளவியல் பற்றிய உமது அறிவை எவ்விதம் பயன்படுத்துவீர் எனச் சுருக்கமாக விளக்குக.

(i) பிள்ளைகளில் சமூகத்திறனை விருத்திசெய்தல்

(ii) பிள்ளைகளில் ஆக்கத்திறனை விருத்தி செய்தல்

(20 புள்ளிகள்)

03. (i) பிள்ளைகளை ஆய்வு செய்வதற்கு அவதானிப்பு முறையை ஒரு நுட்பமாகப் பயன்படுத்தக்கூடிய இரு சந்தர்ப்பங்களைத் தருக.

(2 புள்ளிகள்)

(ii) பிள்ளைகளை அவதானிக்கும் போது ஒரு அவதானிப்பாளர் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய பிரதான அம்சங்களை விளக்குக.

(8 புள்ளிகள்)

(iii) நடத்தைப் பிரச்சினைகளைக் காட்டிய பிள்ளைகளைப் பற்றி அறிவதற்கு ஒரு ஆசிரியர் பின்வரும் தகவல்களை சேகரித்துக்கொண்டார்

- பிள்ளைகளின் நுண்ணறிவு மட்டம்
- பிள்ளையின் ஆரோக்கிய நிலை
- பிள்ளையின் கல்வி முன்னேற்றம்
- பிள்ளையின் பிரச்சினைக்கு காரணமாக இருக்கக்கூடிய காரணிகள்

மேலே தரப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட நுட்பம் யாது?

(2 புள்ளிகள்)

(iv) நீர் குறிப்பிட்ட நுட்பத்தின் மூலம் தகவல்களைச் சேகரிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு படிவ அமைப்பினைத்(format) தருக.

(8 புள்ளிகள்)

04. (i) வகுப்பறையில் பிள்ளைகள் வெளிக்காட்டும் அசாதாரண நடத்தைக் கோலங்கள் ஐந்தினைப் பெயரிடுக.

(5 புள்ளிகள்)

(ii) நீர் குறிப்பிட்ட இந்த நடத்தைக் கோலங்களுள் இரண்டினை விளக்குக.

(8 புள்ளிகள்)

(iii) பிள்ளைகளில் அசாதாரண நடத்தைகளைத் தோற்றுவிக்கும் காரணிகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

(7 புள்ளிகள்)

05. "ஒருவரில் பரம்பரைக் காரணிகளினால் ஏற்படும் செல்வாக்கை சூழல் காரணிகள் மூலம் குறைத்துக்கொள்ள அல்லது மாற்றிக் கொள்ள முடியும்".

(i) பரம்பரை காணிகளால் தீர்மானிக்கப்படுவதாகக் கருதப்படும் மூன்று அம்சங்களைப் பெயரிடுக.

(6 புள்ளிகள்)

(ii) பரம்பரைக்காரணிகளின் செல்வாக்கை சூழல் காரணிகள் மூலம் எவ்வாறு குறைத்துக்கொள்ள அல்லது மாற்றியமைத்துக்கொள்ள முடியுமெனச் சுருக்கமாக விளக்குக.

(14 புள்ளிகள்)

06. (i) நிபுணர்கள் பிறப்புக்கு முந்திய பருவத்தை மூன்று கட்டங்களாகப் பிரித்துள்ளார்கள். இந்த மூன்று கட்டங்களைப்பற்றியும் சுருக்கமாக விளக்குக.

(6 புள்ளிகள்)

(ii) பிறப்புக்கு முந்திய பருவத்தில் சூழல் காரணிகளின் முக்கியத்துவத்திற்கான காரணங்கள் என்ன?

(6 புள்ளிகள்)

(iii) பிறப்புக்கு முன்னைய கட்டத்தில் முளையத்திற்குப் பாதகமாக அமையக்கூடிய மூன்று அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக.

(8 புள்ளிகள்)

07. (i) 'பச்சிளம் குழந்தை' (புத்தம் புது குழந்தை neonate) என்பதன் அர்த்தம் என்ன என்பதை விளக்குக.

(4 புள்ளிகள்)

(ii) பச்சிளம் குழந்தையின் அடிப்படை தேவைகள் நான்கினை விளக்குக.

(6 புள்ளிகள்)

(iii) பச்சிளம் குழந்தையின் இயலுமைகள் (capabilities) ஐந்தினைத் தருக.

(10 புள்ளிகள்)

08. (i) பிறப்பின் போது ஏற்படக்கூடிய இரு வகையான காயங்களைப் பெயரிடுக.

(5 புள்ளிகள்)

(ii) பிறப்பின்போது காயத்திற்குள்ளாகிய பிள்ளையொன்று உமது வகுப்பில் இருக்கிறதென்று கொள்க. இப்பிள்ளைக்கு கற்றல் கற்பித்தல் அனுபவங்களை எவ்வாறு ஒழுங்குபடுத்துவீர் எனச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

09. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு பற்றி சிறு குறிப்புகள் எழுதுக.

(i) சமூகமயமாக்கல் செயன்முறை
(ii) பிள்ளை எவ்வாறு சுயஅறிவு பெற்றுக்கொள்கின்றது.
(iii) முன்பள்ளி பிள்ளையொன்றின் பொதுவான உளஇயக்கத் திறமைகள்

(10 x 2 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)